**காங்கயம் நகராட்சி**

**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் பிலவவருடம் தமிழ்மாதம் ஆடி 14 ஆம் நாள்ஆங்கில வருடம் 2021 ஜுலை மாதம் 30—ஆம் தேதி வெள்ளிகிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**திரு.ம.முத்துக்குமார்**
**தனி அலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண்.902/2021/சி1**

காங்கயம் நகராட்சி ஆணையாளர் திரு.ம.முத்துக்குமார், அவர்களின் ஜீலை 2021—ஆம் மாதத்திற்கான (20.07.2021 முதல் 31.07.2021 வரை) தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1839, நாள்.30.07.2021**
**தீர்மானம்:** பதிவு செய்யப்பட்டது

**மன்றப்பொருள்:2**

**ந.க.எண்.902 /2021/சி1**

காங்கயம் நகராட்சி பொறியாளர் திரு.கு.சரவணன், அவர்களின் ஜீலை 2021 —ஆம் மாதத்திற்கான (01.07.2021 முதல் 31.07.2021 வரை) தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1840 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** பதிவு செய்யப்பட்டது

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண்: 1653 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 முதல் 18 வரையிலான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்ட மெயின் குழாய்கள், விநியோக குழாய்கள், கேட் வால்வுகள் மற்றும் சிறுமின் விசைப்பம்பு திட்டங்களின் மின்மோட்டார்கள், மெயின் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிமேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்த மதிப்பீடு தொகை முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள வேண்டும். தற்போது தேர்தல் நன்நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. மேற்படி பராமரிப்பு பணி மிகவும் அவசியமானதாகும். எனவே, குடிநீர் பணிகள் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் பொதுமக்கள் இப்பணியை தொடர்ச்சியாக மேற்கொள்வது அவசியமாகும். இதற்கு ஏற்கனவே இப்பணியை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலமாக இதே விலைவிகிதத்தில் 30.06.2021 வரை ஒப்பந்தத்தை நீட்டித்து பணிமேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000/— ஆகும். அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1841 , நாள்.30.07.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண்: 0892 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 9 வரையிலான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்ட மெயின் குழாய்கள் விநியோக குழாய்கள், கேட்வால்வுகள் மற்றும் சிறுமின் விசைப்பம்பு திட்டகளின் மின்மோட்டாகள், விநியோக மற்றும் மெயின் குழாய்கள் ஏற்படும் பழுதுகள் பராமரிப்பு பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்த மதிப்பீட்டு தொகை முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பணியை மேற்க்கொள்ள வேண்டும். தற்போது தேர்தல் நன்நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. மேற்படி பராமரிப்பு பணி மிகவும் அவசியமானதாகும். எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணியை தொடர்ச்சியாக மேற்கொள்வது அவசியமாகும். இதற்கு ஏற்கனவே இப்பணியை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலமாக இதே விலைவிகிதத்தில் 30–6–2021 வரை ஒப்பந்தத்தை நீட்டத்து பணிமேற்கொள்ளலாம் இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000/– ஆகும். அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1842 , நாள்.30.07.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 0812 /2021 /இ1**

காங்கயம் நகராட்சியில் அமராவதி குடிநீர் திட்டம், காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் என இரண்டு குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், நூாற்றுக்கும் மேற்பட்ட சிறு மின்விசைப் பம்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை பராமரித்து இயக்க நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை. எனவே, ஒப்பந்த அடிப்படையில் கீழ்கண்டுள்ள பணியாளர்களால் பயன்படுத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

1. குழாய் திருப்புனர் – 5 no
2. Pump operator – 5 no
3. Jeep Driver – 1 no
4. Technical assistant – 1 no

மேற்படி பணியாளர்களின் ஒப்பந்த காலம் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே, ஒப்பந்த அடிப்படையில் இப்பணியாளர்களை வழங்க வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1843 , நாள்.30.07.2021**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 0734/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பங்களாபுதுார் ரோடு ஓம்சக்தி கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறு மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் சிறு மின்விசைப்பம்பு திட்டத்தில் ஆழ்குழாய் கிணற்றில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மின்மோட்டாரில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய வெளியே எடுத்தபொழுது ஆழ்குழாய் கிணற்றில் சிக்கியுள்ளது. இதனால், கேபிள், பைப் மின்மோட்டார்கள் எதையும் வெளியே எடுக்க இயலவில்லை. எனவே, இதை பயன்பாட்டுக்கு கொண்டுவர மேற்படி மின்மோட்டாரை ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார் எடுக்கும் சிறப்பு வல்லுனர்களைக் கொண்டு கிணற்றின் கடைசிப்பகுதிக்கு இறக்கி விடலாம். இதனால் ஆழ்குழாய் கிணற்றை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வரலாம். புதியதாக மின்மோட்டார் மற்றும் தேவையான உபகரணங்கள் பொருத்தி உபயோகிக்கலாம். எனவே, மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கும், (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பணியின் அவசியம் கருதி இப்பணியை உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி சட்டம் 15ன் கீழ் பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1844 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**ந.க.எண்.0798/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான சென்னிமலை சாலையில் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகத்தில் சமையல் உபகரணங்கள் பழுதடைந்துள்ளதால் இதற்கு புதிய உபகரணங்கள் தேவைப்படுவதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் தெரிவித்துள்ளார். மேலும், அம்மா உணவகத்தின் தரைதளம் பழுதடைந்துள்ளது. எனவே, மேற்படி உபகரணங்கள் வாங்கவும் தரைதளம் பழுதுகள் சரி செய்யவும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.25 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**நகர்மன்ற தீர்மான எண். 1845 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 0858/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தை புதுப்பிக்க (Renewal ) மண்டல போக்குவரத்து அலுவலர், தாராபுரம் அவர்களிடம் ஒப்புதல் பெற சிறுசிறு பழுதுகளை சரி செய்து மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தை உடைத்து ஆண் மற்றும் பெண் பாலினருக்கு இலவச கழிப்பிடம் அமைத்தல் மற்றும் R.O Plant –ல் tiles அமைத்தல் மற்றும் சிறு சிறு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ. 4.00 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1846 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**கோப்புஎண்.866/2021 /எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.2, 4, 5, 6, 14, 15 மற்றும் 16 ஆகிய ஏழு வார்டுகளில் சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை நகராட்சிகளுக்கு சொந்தமான வாரச்சந்தையில் கட்டப்பட்டுள்ள பசுமை உரம் தயாரிக்கும் மையம் (MCC) இல் கொண்டு சென்று மக்கும் கழிவுகளை மட்டும் அதற்கென அமைக்கப்பட்டுள்ள இயந்திரத்தின் மூலம் சிறு, சிறு துண்டுகளாக நறுக்கப்பட்டு, அதற்காக அமைக்கப்பட்டுள்ள உரத்தொட்டியில் சேகரிக்கப்பட்டு EM 1 Solution கலந்து தெளிக்கப்பட்டு, உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி EM 1 Solution அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும் ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம் மேற்படி செலவினங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.3.00 இலட்சம். பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1847 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்புஎண் :742/2021 /எச்1**

காங்கயம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தி வரும் மினி ஆட்டோ, மினி டிப்பர் லாரி வண்டி எண்கள்.TN 42 AY 2675 ஆகிய வண்டியில் உள்ள பழுதுகளை சரிசெய்து பொது சுகாதார அவசர அவசியம் கருதி M/S .ABT INDUSTRIES LIMITED, PALLADAM எனும் அங்கீகரிக்கப்பட்ட பணி மனையில் வண்டியில் உள்ள பழுதுகளை சரி செய்து தர வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.
உத்தேச தொகை ரூ.15,000/–

**அலுவலகக் குறிப்பு :** பொதுசுகாதாரஅவசரஅவசியம் கருதிமன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1848 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**கோப்புஎண் :740/2021 /எச்1**

காங்கயம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தி வரும் மினி ஆட்டோ, வண்டி எண், TN 42 T 8478 ஆகிய வண்டியில் உள்ள பழுதுகளை சரிசெய்து பொது சுகாதார அவசர அவசியம் கருதி M/S .ABT INDUSTRIES LIMITED, PALLADAM எனும் அங்கீகரிக்கப்பட்ட பணி மனையில் வண்டியில் உள்ள பழுதுகளை சரி செய்து தர வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.
உத்தேச தொகை ரூ.25,000/–

**அலுவலகக் குறிப்பு :** பொதுசுகாதாரஅவசரஅவசியம் கருதிமன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1849 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**கோப்பு எண் : 158 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான புதிய ஈப்பு வாகனத்திற்கு (ஈப்பு வாகனம் எண்.TN42AZ6350) மாதாந்திர மற்றும் காலமுறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்யுள்ளது. மேலும், குடிநீர் பணிகள், வருவாய் பணிகள் மற்றும் திட்டப்பணிகள் ஆய்வு மற்றும் உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் கலந்தாய்வு போன்ற பணிகள் தடையின்றி நடைபெற ஈப்பு வாகனம் பராமரிப்பு பணிகள் அத்தியாவசியம் என்பதால் மேற்படி பராமரிப்பு பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான CAI Mahindra நிறுவனத்தில் உடனுக்குடன் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மற்றும் வாகனத்திற்கு செலுத்த வேண்டிய காப்புத்தொகையை யுனைடெட் இண்டியா நிறுவனத்தில் செலுத்தவும் உத்தேச மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1850 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:13**

**கோப்பு எண்.1933/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான திருப்பூர் ரோடு ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண் 15 ன் இரண்டாம் தொகுப்பு குத்தகை காலம் 31.07.2021 உடன் முடிவடைவதால் கடையின் குத்தகை உரிமத்தினை மூன்றாம் தொகுப்பு காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு வழங்கக்கோரி கடையின் குத்தகைதாரர் திருமதி.தங்கமணி என்பவர் விண்ணப்பித்துள்ளார் அன்னாரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் ஏற்கனவே உள்ள வாடகை தொகையுடன் 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகை ரூ.34253/– க்கு 01.08.2021 முதல் 31.07.2024 வரை மூன்றாம் தொகுப்பு காலத்திற்கு குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர்& கடை எண் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | நிர்ணயிக்கப்படும் மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1. | தங்கமணி, திருப்பூர் ரோடு ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண் 15. | 01.08.2021 முதல் 31.07.2024 வரை | ரூ.29785/— | ரூ.4468/— | ரூ.34253/— |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1851 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:14**

**கோப்பு எண் : 899/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பெருவாரியான பகுதிகளிலிருந்து சேகரமாகும் மழைநீர் மற்றும் கழிவுநீர் வெள்ளத்தாரை ஓடை வழியாக கரூர்ரோடு சென்று பதுமன்குளம் அடைகிறது. வெள்ளத்தாரை ஓடையின் கிழபுறம் விவசாய நிலங்கள் உள்ளன. ஓடையின் ஆங்காங்கே கரை பலம் இழந்தும் மற்றும் உடைந்து போன காரணத்தால் ஓடையில் செல்லும் கழிவுநீர் மற்றும் மழைநீர் கரையை தாண்டி விவசாய நிலங்களுக்குள் புகுந்து விடுவதாக விவசாயிகள் தெரிவித்து 21.07.2021 அன்று மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சரிடம் மனு அளித்தனர். அதன் பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வின் போது, தற்போது தென்மேற்கு பருவமழை காரணமாக இயற்கை இன்னல்கள் அதிக இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாலும், தேங்கி நிற்கும் கழிவுநீர் மூலம் நகரில் அதிக அளவில் கொசு உற்பத்தி ஆவதற்கு அதிக வாய்ப்பு உள்ள காரணத்தினால் வெள்ளத்தாரை ஓடையின் கரையை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது.

அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி ஏற்கனவே கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தோண்டி எடுத்து சந்தைப்பேட்டை மற்றும் உரக்கிடங்கில் சேகரம் செய்து வைக்கப்பட்டுள்ள மண்ணை கொண்டு வெள்ளத்தாரை ஓடையின் கரையை உயர்த்தவும் பலப்படுத்தவும் ஜே.சி.பி மற்றும் லாரிகள் மூலம் இப்பணியை மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1852 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மன்றப்பொருள்:15

**கோப்பு எண் : 867/2021/எச்1**

காங்கயம் நகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 99 நாள்: 01.6.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் பரப்பளவு 22.17 ச.கி.மீ நீளம் கொண்டதாகவும், 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 32147 மக்கள் தொகை கொண்டதாகும். இந்நகராட்சியில் மொத்த வார்டுகளின் எண்ணிக்கை-18. வடிகால்களின் நீளம்-36கி.மீ, வீதிகளின் எண்ணிக்கை சுமார் 179 ஆக உள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினசரி பொதுமக்களிடமிருந்து சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளின் அளவு சுமார் 11.00 மெ.டன். குப்பைகளை தினந்தோறும் சேகரிக்க பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் டிராக்டர்-1 , டிப்பர் லாரி-2, டம்பர் பிளேசர்-1, மினிஆட்டோ–4, ஜே.சி.பி-1 சைக்கிள் ரிக்ஷா -5 மற்றும் பேட்டரி வண்டி(BOV)- 22 பயன்படுத்தப்படுகின்றன. காங்கயம் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியளார்கள் எண்ணிக்கை 38 இதில் தற்போது 34 தூய்மை பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். 4 தூய்மை பணியாளர் பணியிடம் காலியிடமாக உள்ளது. மேற்கண்ட பணியாளர்கள் கொண்டு நகர் முழுவதும் தூய்மை பணி செவ்வனே செய்ய இயலாத நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்101 நாள்:30.4.1997–இல் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள அளவுகோலின்படி 200 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இதில் 38 நிரந்தர தூய்மை பணியாளர்கள் தவிர மீதமுள்ள 162 தற்காலிக தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனியார் நிறுவனம் (Out Sourcing) மூலம் பொது சுகாதார பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் 129 தூய்மை பணியாளர்கள் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டது. மேற்படி நிர்வாக அனுமதி காலம் 03.12.2021 உடன் முடிவடைவதால், தற்போது உலகை உலுக்கி வரும் கொடிய நோயான கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தூய்மை பணி மிக முக்கிய பணியாக கருதுவதால் தற்போது வழங்கியுள்ள 129 தூய்மை பணியாளர்கள் உடன் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி கூடுதலாக 33 தூய்மை பணியாளர்கள் சேர்த்து ஆக மொத்தம் 162 தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி தூய்மை பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அரசாணை எண்.101இன்படி தேவைப்படும் தூய்மை பணியாளர்களின் விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **வேலை வகைப்பாடு** | **அளவு கோல்** | **மொத்த வீடுகளின் எண்ணிக்கை** | **தேவையான தூய்மை பணியாளர்கள்** | **எண்ணிக்கை (நபர்கள்)** |
| 1 | 250 குடியிருப்புகளுக்கு (அல்லது) மூன்று கிலோ மீட்டர் சாலைக்கு | 3 பேர் கொண்ட குழு | 12009 | – | 144 |
| 2 | பெரிய லாரிக்கு | 4 | – | – | – |
| 3 | சிறிய லாரிக்கு | 3 | – | சிறிய லாரி–2 எண்ணிக்கை | 6 |
| 4 | டிராக்டர் வாகனத்திற்கு | 3 | – | டிரேக்டர்–1 எண்ணிக்கை | 3 |
| 5 | ட்ரில்லர்/மினி ஆட்டோ வாகனத்திற்கு | 1 | – | மினி ஆட்டோ 4 எண்ணிக்கை | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | உரக்கிடங்கு பராமரிப்புக்கு (நாள் தோறும் 20 மெட்ரிக் டன் குப்பை சேருமிடத்திற்கு) | 2 | – | 11 மெட்ரிக் டன் | 2 |
| 7 | 20 மெட்ரிக் டன்னுக்கு அதிகமாக குப்பை சேருமிடத்திற்கு | 4 | – | – | – |
| 8 | பேருந்து நிலையத்திலும் மற்றும் அங்காடியில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தை பராமரிக்க | 1 | – | 3 கழிப்பிடங்கள் | 3 |
| 9 | கழிவு நீர்பண்ணை பராமரிக்க 20 ஏக்கர் வரை | 2 | – | – | – |
| 10 | 20 ஏக்கருக்கு மேல் | 4 | – | – | – |
| 11 | பேருந்து நிலைய கழிவறையை பராமரிக்க | 1 ஆண், 1 பெண் | – | 1 ஆண், 1 பெண் | 2 |
| 12 | பேருந்து நிலையத்தை சுத்தம் செய்ய சி மற்றும் டி நிலை பேருந்து நிலையத்திற்கு | 2 | – | – | 2 |
| 13 | ஏ மற்றும் பி நிலை பேருந்து நிலையத்திற்கு | 4 | – | – | – |
| 14 | பத்து இலட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடியையும் மற்றும் அங்குள்ள கழிவறையை சுத்தம் செய்யவும் | 2 | – | – | 2 |
| 15 | கூடுதல் வருமானம் ஒவ்வொரு பத்து இலட்சதிற்கும் கூடுதல் பணியாளர்கள் | 4 | – | (8 X 4 = 32) ரூ.85.00இலட்சம் | 32 |
| 16 | கழிவு நீர் ஊர்திக்கு | 2 | – | – | – |
| 17 | குப்பை வண்டிக்கு | 1 | – | – | – |
| 18 | கழிவு நீர் வண்டிக்கு | 2 | – | – | – |
| 19 | மாடுகளை பராமரிக்க 20 மாடுகளுக்கு | 1 | – | – | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | 20 மாடுகளுக்கு அதிகமாயிருப்பின் | 2 | – | – | – |
| | **மொத்தம்** | | | | **200 நபர்கள்** |

**அலுவலககுறிப்பு :** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்101 நாள்:30.4.1997ல் தெரிவித்துள்ள அளவுகோலின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு K.Dis.No.28369/J3, நாள்.04.12.2018இன்படி ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்கள் தனியார் நிறுவனம் மூலம் பணி செய்து கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு, இந்த உத்தரவானது 03.12.2021ஆம் தேதியுடன் முடிவடைவதால், மேற்படி தூய்மை பணியில் தொய்வு ஏற்படக்கூடாதென்பதற்காக ஒப்பந்த அடிப்படையில் 162 தூய்மை பணியாளர்களை அமர்த்தி கொள்ளவும், உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருப்பூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1853 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:16**

**கோப்பு எண் : 1653/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரையிலான பகுதிகளில் குடிநீர் திட்ட மெயின்குழாய், விநியோகக்குழாய்கள், கேட்வால்வுகள் மற்றும் சிறுமின்விசைப்பம்பு திட்டங்களில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதியும் குடிநீர் பணியின் அவசியம் கருதியும் உடனுக்குடன் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்சமயம் இந்த ஒப்பந்த காலம் 30.06.2021 – உடன் முடிவடைந்துள்ளது. தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சூழ்நிலையில் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால் விநியோகப்பணி தடை ஏற்பட கூடாதென்பதற்காக தற்போது உள்ள ஒப்பந்ததாரரிடம் 01.07.2021 முதல் 31.08.2021 முடிய தொடர்ந்து பணி பார்க்கவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிபீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர்நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1854 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:17**

**கோப்பு எண் : 892/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையிலான பகுதிகளில் குடிநீர் திட்ட மெயின்குழாய், விநியோகக்குழாய்கள், கேட்வால்வுகள் மற்றும் சிறுமின்விசைப்பம்பு திட்டங்களில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதியும் குடிநீர் பணியின் அவசியம் கருதியும் உடனுக்குடன் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்சமயம் இந்த ஒப்பந்த காலம் 30.06.2021 – உடன் முடிவடைந்துள்ளது. தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சூழ்நிலையில் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால் விநியோகப்பணி தடை ஏற்பட கூடாதென்பதற்காக தற்போது உள்ள ஒப்பந்ததாரரிடம் 01.07.2021 முதல் 31.08.2021 முடிய தொடர்ந்து பணி பார்க்கவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர்நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1855 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:18**

**கோப்பு எண் : 0363/2015 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 ஏ.சி நகர், விநாயகர் கோவில் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மும்முனை மின் இணைப்பு பெறுவதற்கு இந்நகராட்சியால் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் கேட்பு வழங்க கோரப்பட்டது. மும்முனை மின் இணைப்பு வழங்க தொகை ரூ.9950/–யை செலுத்துமாறு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வடக்கு பிரிவிடமிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ.9950/–யை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1856 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:19**

**கோப்பு எண் : 0363/2015 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 உடையார் காலணி , கோவை ரோடு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மும்முனை மின் இணைப்பு பெறுவதற்கு இந்நகராட்சியால் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் கேட்பு வழங்க கோரப்பட்டது. மும்முனை மின் இணைப்பு வழங்க தொகை ரூ.9968/–யை செலுத்துமாறு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தெற்கு பிரிவிடமிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ.9968/–யை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1857 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:20**

**கோப்பு எண் : 0886/2021 /இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக (குடிநீர், தெருவிளக்கு புகார்கள் தெரிவித்தல், வரி செலுத்துதல் போன்ற) பொதுமக்கள் தினசரி வந்து செல்கின்றனர். அலுவலகத்தின் மெயின் வாயிலில் பெயிண்டிங் உட்பட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், பதிவு அறையில் உள்ள இரும்பு அலமாரிகள் பழுதடைந்துள்ளது மற்றும் அலுவலக உபயோகத்திற்கு ஒரு நாற்காலி மற்றும் டேபிள் மற்றும் வசூல் மையத்தில் ஏற்கனவே உள்ள கண்ணாடியை உயர்த்தவும், அலுவலக வளாகத்தில் அறிவிப்பு பேனர் வைத்ததற்கும் , தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1858 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மன்றப்பொருள்:21**

**கோப்பு எண் : 0879/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட திருப்பூர் ரோடு சீரணி அரங்கம் தெற்கு மார்க்கெட் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் மூன்று கடைகள் கட்டப்படும் பட்சம் காங்கயம் நகராட்சியின் வருவாய் அதிகரிப்பதுடன் பொதுமக்களும் பயனடைவார்கள். இப்பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1859 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மன்றப்பொருள்:22

**கோப்பு எண் : 0858/2021 /இ1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதார பணிக்கு பயன்படும் BOV வாகனங்களில் 8 எண்ணிக்கை பழுதடைந்துள்ளது. இந்த வாகனங்களின் வருடாந்திர பராமரிப்பு பணியை ஒப்பந்ததாரர் மேற்கொள்ளும் பட்சத்தில் பழுதடைந்த நிலையில் மாற்றப்பட வேண்டிய உபகரணங்கள் கீழ்க்கண்டவாறு நகராட்சி மூலமாக வழங்க ஒப்பந்ததாரர் தெரிவித்துள்ளார்.

1. LITHIUM BATTERY - 6Nos
2. BRAKE PEDAL - 1No
3. BRAKE ROD LONG - 1No
4. BRAKE ROD SMALL - 3 Nos
5. BRAKE SHOE - 1Set
6. CENTRE AXLE 12MM - 3 Set
7. CENTRE AXLE 15 MM - 3 Set
8. CONTROLLER 60V - 3Nos
9. CONVERTER - 4 Nos
10. SHOCKER - 1Set
11. HORN FRONT - 3 Nos
12. MUDGUARD FRONT - 2 Nos
13. HAND BRAKE - 1No
14. HAND BRAKE CABLE - 4 Nos
15. HEAD LIGHT LED - 6Nos
16. FRONT BRAKE DRUM 12 MM - 2 Nos
17. FRONT BRAKE DRUM 15 MM - 2 Nos
18. IGNITION SWITCH - 5 Nos
19. INDICATOR FRONT - 5 Set
20. THROTTLE RIGHT AND LEFT SWITCH - 2 Nos
21. LAMP EAR - 2Set
22. METER 60 V - 5 Nos
23. MOTOR 60V - 4 Nos
24. RIM - 5Nos
25. BRAKE SPRING - 7 Nos
26. T HANDLE - 2 Nos

27. T HEAD - 2 Nos
28. THROTTLE - 3 Nos
29. TUBE - 7 Nos
30. TYRE - 5 Nos
31. WIRE KIT - 6 Nos
32. WELDING SERVICE - 1 Nos
33. FORK PIPE - 1Nos
34. CHARGER LITHIUM BATTERY - 6 Nos
35. CHARGES LED ACID BATTERY - 8Nos

மேற்படி உதிரி பாகங்களுக்கு மற்றும் வருங்காலத்தில் ஏற்படும் பழுதுகள் சரி செய்யும் பணி அவசியமாகிறது. இப்பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 8.25 இலட்சத்திற்கு (ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1860 , நாள்.30.07.2021**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒம்/—ம.முத்துக்குமார்,
ஆணையாளர் மற்றும் தனி
அலுவலர்,
காங்கயம் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
காங்கயம் நகராட்சி.